**பிப்ரவரி – 14**

# TNPSC துளிகள்

- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் (United Nations High Commissioner for Refugees - UNHCR) ஒவ்வொரு ஆண்டும் அகதிகள் பயணிக்கும் தூரத்தை அறிந்து கொள்ள உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு அழைப்பு விடுத்து ஒரு உலகளாவியப் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.
    - இந்தப் பிரச்சாரமானது 2 பில்லியன் கிலோமீட்டர் தொலைவு குறித்த ஒரு பாதுகாப்புப் பிரச்சாரம் என்று அழைக்கப் படுகின்றது.
- இந்திய ரிசர்வ் வங்கி, ஜிஎஸ்டி பதிவு செய்யப்பட்ட சிறு, குறு, நடுத்தர நிறுவன கடன் வாங்குபவரின் வங்கிக் கணக்கை ஒரு முறை மறுசீரமைப்பதற்கான காலக்கெடுவை மேலும் ஒரு வருடம் அதாவது 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை நீட்டித்துள்ளது.
    - ரிசர்வ் வங்கியின் முந்தைய வழிகாட்டுதல்களின்படி, மறுசீரமைப்பானது 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்கு முன்னர் செயல்படுத்தப்பட இருந்தது.
- புதுச்சேரி சட்டமன்றமானது 2019 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத் திருத்தம் (Citizenship Amendment Act - CAA), தேசியக் குடிமக்கள் பதிவேடு (National Register of Citizens - NRC) மற்றும் தேசிய மக்கள்தொகைப் பதிவேடு (National Population Register - NPR) ஆகியவற்றுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
- இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் விராட் கோலி 2020 ஆம் ஆண்டு ஐசிசி ஆண்கள் டெஸ்ட் தரவரிசையில் தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## SPICe+

- மத்தியப் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகமானது, தற்போதுள்ள SPICe என்ற படிவத்தை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக 'SPICe+' என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய வலைதளப் படிவத்தை பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.
- எளிதில் தொழில் தொடங்குதலை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த முயற்சி உள்ளது.
- SPICe+ ஆனது ஒரு ஒருங்கிணைந்த வலைதளப் படிவமாக இருக்கும்.
- SPICe+ ஆனது 10 விதமான சேவைகளைப் பின்வரும் 3 மத்திய அரசு அமைச்சகங்கள் மற்றும் துறைகள் மூலமாக வழங்குகின்றது.
    - மத்தியப் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம்,
    - மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்
    - மத்திய நிதி அமைச்சகத்தின் வருவாய்த் துறை
    - ஒரு மாநில அரசு (மகாராஷ்டிரா). இவை மூலம் இந்தியாவில் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கான பல நடைமுறைகள், நேரம் மற்றும் செலவு ஆகியவை குறைக்கப் படுகின்றது.
- இது புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள அனைத்துப் புதிய நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

## ஹம்பியைச் சுற்றியுள்ள கட்டுமானத்தை இடித்தல் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு


- உலகப் பாரம்பரிய தளமான ஹம்பியைச் சுற்றியுள்ள வணிகக் கட்டிடங்களை இடித்தல் தொடர்பான கர்நாடக அரசு அதிகாரிகளின் முடிவை உச்ச நீதிமன்றம் உறுதிப் படுத்தியுள்ளது.
- 1961 ஆம் ஆண்டின் மைசூர் பண்டைய வரலாற்று நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்கள் சட்டத்தை மீறுவதாக இந்தக் கட்டுமானங்கள் இருந்தன.
- இந்தப் பாரம்பரிய தளம் அமைந்துள்ள விருப்பபுரா காடி என்ற கிராமம் முழுவதும் 1988 ஆம் ஆண்டு தீர்ப்பில் ஒரு பாதுகாக்கப்பட்ட மண்டலமாக அறிவிக்கப்பட்டது.

***ஹம்பி***

- இது இடைக்கால இந்தியாவின் மிகப்பெரிய பேரரசுகளில் ஒன்றான 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகரப் பேரரசின் தலைநகரமாகக் கருதப்படுகின்றது.
- இது யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உலகப் பாரம்பரிய தளமாகும்.
- ஹம்பியில் உள்ள வித்தலா கோயிலானது விஜயநகர பாணியின் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.
- ராமாயணத்தில் உள்ள 'கிஷ்கிந்தா காண்டத்தில்' ஹம்பியைப் பற்றியக் குறிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.
- இது துங்கபத்திரா நதிக்கு அருகில் அமைந்துள்ளது.
- கி. பி 1500 ஆம் ஆண்டு வாக்கில், ஹம்பி - விஜயநகர அரசானது பெய்ஜிங்கிற்கு அடுத்து உலகின் இரண்டாவது மிகப்பெரிய இடைக்கால நகரமாக, அதே நேரத்தில் இந்தியாவின் பணக்கார அரசாகவும் விளங்கியது.

## வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள்

- சமீபத்திய தரவுகளின்படி, 1.36 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் வெளிநாட்டில் வாழ்கின்றனர்.
- அதிக எண்ணிக்கையிலான வெளிநாடு வாழ் இந்தியர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் வாழ்கின்றனர். அங்கு ஒட்டுமொத்தமாக 34,20,000 இந்தியர்கள் அதாவது வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களில் நான்கில் ஒரு பங்கு அளவிற்கு வாழ்கின்றனர்.




## தேசிய நீர் மாநாடு

- மத்தியப் பிரதேச முதலமைச்சர் கமல்நாத் மத்தியப் பிரதேசத்தின் போபாலில் தேசிய

நீர் மாநாட்டைத் துவக்கி வைத்துள்ளார்.

- “நீர் பெறுவதற்கான உரிமைச் சட்டம்” அல்லது “நீர் உரிமைகள் சட்டம்” ஆகியவற்றின் வழிகாட்டுதல்களை இறுதி செய்வதற்காக இந்த மாநாடு நடைபெற்றது.
- நீர் பெறுவதற்கான உரிமைச் சட்டத்தை விரைவில் அமல்படுத்த உள்ளதாக மத்தியப் பிரதேச அரசு அறிவித்துள்ளது. இதுபோன்ற ஒரு சட்டத்தைச் செயல்படுத்த இருக்கின்ற நாட்டின் முதலாவது மாநிலமாக இது விளங்கும்.

### மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் மருத்துவ சாதனங்கள்

- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல், நாட்டில் விற்கப்படும் அனைத்து மருத்துவச் சாதனங்களும் மருந்துகளாக கருதப்படும். மேலும் அவை 1940 ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படும்.
- இந்த அறிவிப்பை மத்தியச் சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- மருந்துப் பொருட்கள் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- 1940 ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டமானது இந்தியாவில் மருந்துப் பொருட்களின் இறக்குமதி, உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்துகின்றது.

## பொருளாதாரச் செய்திகள்

### சிறந்த 500 வங்கி நிறுவனங்கள் - 2020

- வங்கியாளர்களின் “2020 ஆம் ஆண்டின் சிறந்த 500 வங்கி நிறுவனங்கள்” என்ற அறிக்கையின்படி, உலகளாவிய வங்கிகளிடையே ‘நிறுவன மதிப்பில் உயர் அதிகரிப்பு’ கொண்ட வங்கிகளின் பட்டியலில் இந்தியாவின் இண்டஸ்இண்ட் வங்கியானது முதலிடத்தில் உள்ளது.
- இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக, "நாட்டின் மொத்த நிறுவன மதிப்பில் சிறந்த 50 நாடுகள்" என்ற பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தப் பட்டியலில் 2019 ஆம் ஆண்டில் 10வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 8வது இடத்தில் உள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### ககரின் ஆராய்ச்சி மற்றும் சோதனை விண்வெளிப் பயிற்சி மையம்

- ககன்யான் விண்வெளிப் பயணத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 4 இந்திய விண்வெளி வீரர்கள் “ககரின் ஆராய்ச்சி மற்றும் சோதனை விண்வெளிப் பயிற்சி மையத்தில்” (Gagarin Research and Test Cosmonaut Training Centre - GCTC) தங்கள் பயிற்சியைத் தொடங்கினர்.
- GCTC என்பது விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் விண்வெளி வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு பயிற்சி அமைப்பாகும்.

- இது ரஷ்யாவின் மாஸ்கோவில் அமைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் (இஸ்ரோ) செலுத்தப் பட உள்ள இந்தியாவின் முதலாவது மனித விண்வெளித் திட்டம் ககன்யான் ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## நிலத்தடி நீர்ச் சட்டம் - 2020

- முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தரப் பிரதேச மாநில அமைச்சரவையானது நிலத்தடி நீர்ச் சட்டம் – 2020 என்ற ஒரு சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இச்சட்டமானது நீரில் மூழ்கக்கூடிய பம்புகளை பதிவு செய்வதைக் கட்டாயம் ஆக்குகின்றது.
- விவசாயிகள் மற்றும் வீட்டுப் பயனர்கள் பம்புகளைப் பயன்படுத்த கட்டணம் செலுத்தத் தேவையில்லை.
- இந்தச் சட்டமானது அனைத்து தனியார்ப் பள்ளிகள், கல்லூரிகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைப்பதைக் கட்டாயமாக்குகின்றது.
- நிலத்தடி நீரை மாசுபடுத்தும் நபர்கள் / நிறுவனங்களுக்குத் தண்டனையும் அபராதமும் விதிக்க இந்தச் சட்டம் வழிவகை செய்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டி

- மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஆதித்யா மேத்தா புனேவில் நடைபெற்ற தேசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.
- அவர் இப்போட்டியில் பல முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற பங்கஜ் அத்வானியைத் தோற்கடித்துள்ளார்.
- மகளிர் ஸ்னூக்கர் இறுதிப் போட்டியில், மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த வித்யா பிள்ளை சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- ஸ்னூக்கர் என்பது பில்லியர்ட் போர்டில் விளையாடப்படும் ஒரு விளையாட்டு ஆகும்.

## தேசிய குளிர்கால விளையாட்டு - குல்மார்க்

- தேசிய குளிர்கால விளையாட்டுகள் 2020 ஆம் ஆண்டு மார்ச் 7 முதல் ஜம்மு காஷ்மீரின் குல்மார்க்கில் நடைபெற உள்ளது.
- உலகப் புகழ்பெற்ற பனிச்சறுக்கு இடமான குல்மார்க்கில் இந்த விளையாட்டுக்கள் ஐந்து நாட்கள் நடைபெற உள்ளன.
- இது கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெற இருக்கின்றது.
- கேலோ இந்தியா நிகழ்வின் முக்கிய நோக்கமானது இந்தியா முழுவதும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதாகும்.

- 2020 ஆம் ஆண்டில் இது அசாமின் குவஹாத்தியில் நடைபெற்றது.

# முக்கிய தினங்கள்

## உலக யுனானி தினம் - பிப்ரவரி 11

- ஒவ்வொரு ஆண்டும், ஹக்கீம் அஜ்மல் கானின் பிறந்த நாளான பிப்ரவரி 11 அன்று, உலக யுனானி தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- அவர் ஒரு இந்திய யுனானி மருத்துவர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார்.
- இந்த நாளின் முக்கிய நோக்கமானது யுனானி மருத்துவ முறை, அதன் நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் நோய் தீர்க்கும் தத்துவங்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதாகும்.
- அந்த நாளை நினைவுகூரும் வகையில் மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஒரு விழாவை ஏற்பாடு செய்தது. அதில் மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார்.
- யுனானி மருத்துவ முறையானது கிரேக்கத்தில் தோன்றியது.
- இது இந்தியாவில் ஏறக்குறைய பதினொன்றாம் நூற்றாண்டில் அரேபியர்கள் மற்றும் பாரசீகர்களால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- ஹக்கீம் அஜ்மல் கானின் தாத்தா ஹக்கீம் ஷெரீப் கான் முகலாய பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்திற்கு மருத்துவராக இருந்தார்.




## சர்வதேச டார்வின் தினம் - பிப்ரவரி 12

- பரிணாம உயிரியலின் தந்தையான சார்லஸ் டார்வினின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் பட்டது.
- 1809 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதி இங்கிலாந்தின் ஷ்ரோப்ஷையரில் உள்ள ஷ்ரூஸ்பரி என்ற இடத்தில் இவர் பிறந்தார்.
- இந்த நாளானது பரிணாம மற்றும் தாவர அறிவியலில் டார்வின் ஆற்றியப் பங்களிப்பை எடுத்துக் காட்டுகின்றது.

## உலக வானொலி தினம் - பிப்ரவரி 13

- வானொலியின் முக்கியத்துவம் குறித்துப் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களில்

விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 13 அன்று உலக வானொலி தினம் கொண்டாடப் படுகின்றது.

- இந்த ஆண்டு உலக வானொலி தினத்தின் கருப்பொருள் - 'வானொலி மற்றும் பன்முகத் தன்மை' என்பதாகும்.
- 2011 ஆம் ஆண்டில் 36வது யுனெஸ்கோவின் பொது மாநாட்டில், பிப்ரவரி 13 ஆம் நாள் உலக வானொலி தினமாக அறிவிக்கப் பட்டது.
- 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அகில இந்திய வானொலியானது உலகின் மிகப்பெரிய வானொலி வலையமைப்புகளில் ஒன்றாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★